**செய்தி வெளியீடு எண் : 648** **நாள் : 04.04.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைப்பெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைப்பெற்றது. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ இ.ஆ.ப., அவர்கள், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எம்.செல்வராஜ் அவர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக்கழக தலைவர் திரு.உ.மதிவாணன் அவர்கள், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பூண்டி.கே.கலைவாணன் அவர்கள், தமிழ்நாடு சட்டப்பேரவை மதிப்பீட்டுக்குழுத் தலைவர், மாநில திட்டக் குழு உறுப்பினர், மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர்.பி.ராஜா அவர்கள், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.க.மாரிமுத்து அவர்கள், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.கோ.பாலசுப்ரமணியன் ஆகியோர் உடன் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரியதிட்டங்களான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், இ-வாடகை குறித்தும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சிதிட்டம்-II, சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு, தீனதயாள் உபாத்யாகிராமின் கௌசல்யாதிட்டம், குடிநீர் விநியோகம் (ஊரகம்) உள்ளிட்டதிட்டங்கள் குறித்தும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுதிட்டம், நமக்கு நாமே திட்டம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம் குறித்தும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசின் இ-சேவைமையம், பள்ளிகல்வித்துறையின் எண்ணும், எழுத்தும் இயக்கம், பள்ளி உட்கட்டமைப்பு, அரசு பள்ளிகளின் தேர்ச்சி விகிதம், சிறப்பு திட்ட

செயலாக்களான நான் முதல்வன் திட்டம், மாண்புமிகு முதல்வரின் சிறப்பு திட்டாக்கப் பணிகள் செயல்பாடுகள் குறித்தும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப்பணிகள், அங்கான்வாடிகள், புதுமை பெண் திட்டம் குறித்தும், மருத்துவத்துறையின் மக்களை தேடி மருத்துவம் குறித்தும், முதல்வரின் முகவரி திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், நடைபெற்று வரும் திட்டப்பணிகளை விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ப.சிதம்பரம் அவர்கள், ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி பி.சந்திரா அவர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி சங்கீதா, செல்வி. கீர்த்தனாமணி, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் திரு.வடிவேல் மற்றும் அனைத்து துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in